**கவனிக்க.**- 2007.03.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1488 - 2007 මාර්තු 09 වැනි සිකුරාදා - 2007.03.09

1488 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 150 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 153 |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மாச்சு 16 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, மாச்சு 02 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டு பிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் பதவிகள் (பொறிமுறை)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாபல் பதவிகளுக்கு (பொறிமுறை) இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழக்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், "பணிப்பாளர், ஆட்சேர்ப்பு, ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், கொழும்பு 1" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "பொலிஸ் கொஸ்தாபல் (பொறிமுறை)" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2007.04.09 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்கூறப்பட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

| இல. | தொழில் | தொழில் தகைமைகளும் அனுபவமும் |
|---|---|---|
| 1. | இயந்திர பொறிவலர் | 4 ஆம் பந்தி இ பார்க்கவும் |
| 2. | மின்சார பொறிவலர் | 4 ஆம் பந்தி இ பார்க்கவும் |
| 3. | தகர வேலை பொறி வலர் | 4 ஆம் பந்தி இ பார்க்கவும் |
| 4. | கடைச்சல் இயந்திர பொறிவலர் | 4 ஆம் பந்தி இ பார்க்கவும் |
| 5. | மோட்டார் சைக்கிள் பொறிவலர் | 4 ஆம் பந்தி இ பார்க்கவும் |
| 6. | சொகுசு இருக்கை பொறிவலர் | அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் வழங்கப்படும் இரு வருட காலம் அனுபவ சான்றிதழ் |
| 7. | வர்ணம் பூசும் பொறி வலர் | 4 ஆம் பந்தி இ பார்க்கவும் |
| 8. | ரயர் மாற்றுபவர் | அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் வழங்கப்படும் இரு வருட காலம் அனுபவ சான்றிதழ் |
| 9. | சுத்தம் செய்யும் பொறிவலர் | அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் வழங்கப்படும் இரு வருட காலம் அனுபவ சான்றிதழ் |
| 10. | மின்கலன் பொறி வலர் | அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் வழங்கப்படும் இரு வருட காலம் அனுபவ சான்றிதழ் |
| 11. | காற்று சீராக்கி பொறிவலர் | 4 ஆம் பந்தி இ பார்க்கவும் |
| 12. | உந்து தொழில்நுட்ப பொறிவலர் | 4 ஆம் பந்தி இ பார்க்கவும் |
| 13. | உருக்கி ஒட்டும் பொறிவலர் | 4 ஆம் பந்தி இ பார்க்கவும் |

3. **சம்பள அளவுத்திட்டம்.**- *பொலிஸ் கொஸ்தாபல் (பொறிமுறை)* - ரூபா 1,66,560 - 7 x 1,440 - 27 x 1,800 - ரூபா 2,25.240.

மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமான கீழ்க்காணும் படிகள் அவர்களுக்கு மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) விசேட கடினப்படி :

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் சேவையின் போது ரூபா 1,200.
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் சேவையின் போது ரூபா 600.

(ஆ) இணைந்த படிகள் :

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமையின் பொருட்டு (முழுமையாக இணைந்த படிகள்) ரூபா 10,500.
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் சேவையின் போது ரூபா 3,500.

(அ) இலவச பிரயாண வசதிகள்
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் மருத்துவ சிகிச்சை பெறும் பொருட்டு நிதி உதவி பெற்றுக் கொள்ள முடியும்)
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்
(ஈ) தமது விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்
(உ) கடமைக்கான பிரயாணச் செலவுகள், கஷ்ட மான சேவைகளுக்காகவும் அத்துடன் திறமை யான கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதியாகப் பணம் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள்.**- (அ) *வயதெல்லை.*- பொலிஸ் கொஸ்தாபல் (பொறிமுறை) - வர்த்தமானி அறிவித்தலின் படி விண்ணப்ப முடிவு திகதியில் 18-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) *கல்வித் தகைமைகள்.*- பொலிஸ் கொஸ்தாபல் பதவி (பொறிமுறை) - க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், ஊடகமொழி அடங்கலாக ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத் தலின்படி பாடங்களின் எண்ணிக்கையைக் கணக்கிலெடுக்கும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும் இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு**.- 2. க.பொ.த (சா./த.) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழிநுட்ப பாடத்தில் சித்தியடையாமை, அதே பாடத்தில் செயல் முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடை யாததாக கருதப்படும்.

**குறிப்பு** 3.- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த (சா./த.) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்தி பெறுதல் க. பொ. த. (சா./த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

(இ) *தொழில் தகைமைகள் :*

(i) அரச அல்லது அரசாங்கத்திடம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் தேவையான தொழில் தொடர்பாக குறைந்தது ஒரு வருட அனுபவச்சான்றிதழ் அல்லது தேசிய தொழிற் பயிலுனர் சபையின் கீழ் இயங்கும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேவையான தொழில் தொடர்பாகக் குறைந்தது. ஒரு வருட பயிற்சி சான்றிதழ்.

(ii) அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினில் வழங்கப்படும் ஒரு வருட கால அனுபவச் சான்றிதழ்.

(iii) க. பொ. த. சாதாரண பரீட்சை இயந்திரவியல் விஞ்ஞானத்தை ஒரு பாடமாக எடுத்து சித்தியடைவதை மேலதிக தகுதி எனக் கொள்ளப்படும்.

(ஈ) *பௌதிக தகைமைகள் :*

உயரம் : 5 அடி 4 அங். (ஆகக் குறைந்தது)

மார்பு : 30 அங். ஆகக்குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய, தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும் மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிவின்படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

(உ) *பார்வை தொடர்பான தேவை*.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றக் கண்ணில் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமையற்றவராவர்.

(ஊ) *பிற தகைமைகள் :*

(i) விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள் விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது. மேற்போன்ற அடிப்படைத் தகுதிகள், உடற்தகைமைகள், வயது எல்லை ஆகியவற்றுடன் விளையாட்டு, ஏதாவது விசேட தகைமைகள் உள்ளவர்களுக்கு மேலதிக கவனம் செலுத்தப்படும்.

(ii) இறுதித் தெரிவு சபை முன் தோற்றுவதற்கு முன் விண்ணப்பதாரர் அடிப்படைத் தகைமைகளைப் பரிசோதிக்கும் பரீட்சை, மனோ வலிமைப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். எழுத்துப் பரீட்சை வினாப்பத்திரங்கள் இரண்டினைக் கொண்டிருக்கும்.

மனோ வலிமை பரீட்சை சித்திபெறும் விண்ணப்பதாரிகள் செயல்முறை பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர்.

தொழில்சார் பரீட்சை வாய்மொழி மூலமாகவும், செயல் முறை மூலமாகவும் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த தொழில் வாகன பராமரிப்பு வாகனம் புதுப்பித்தல் தொடர்பாகவும் பரீட்சிக்கப்படுவர்.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளின் நடத்தை தொடர்பான இரகசிய விசாரணை நடாத்தப்படும். நன் நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே தெரிவு செய்யப்படுவர்.

5. **நியமன நிபந்தனைகள் பின்வருமாறு அமையும்**.- இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்கு உட்பட்டது. விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

6. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் மூன்று ஆண்டு காலத்திற்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை விளைவுறுதும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபன விதிக் கோவையின் I ஆம் II ஆம் தொகுதி களின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக்கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

(உ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பதவியில் உறுதிப்படுத்தப்படும் வரை பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதி இல்லாமல் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார். எவ்வாறாயினும் 1973, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதிய பொலிஸ் வர்த்தமானி பகுதி II இன் 41 ஆம் இலக்க அறிவித்தலின்படி தவிர்க்க முடியாத மிக முக்கிய காரணங்களின் கீழ் ஆகக் குறைந்தது 2 வருட திருப்திகரமான சேவையின் பின் பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதியுடன் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படலாம்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நியமனத்திலிருந்து 3 வருடகால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்றவேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும் சீருடை முதலியவற்றுக்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத்தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத்தொகை இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக் கோவையின் முதலாம் தொகுதியில் ஐந்தாம் அத்தியாயத்தின் நாலாம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் (பொறிமுறை) பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் (பொறிமுறை) பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ)பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் (பொறிமுறை) பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

7. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

8. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெற்ற குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைகளை சான்றுப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத்துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாகப் பெறப்பட்ட சான்றிதழ் ;

(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

9. (அ) ஏலவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப் படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"x 8" அளவு தாளிலான விண்ணப்பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ் பிரதியுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தரிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்த லாகாது.

10. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்து செலவோ பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

*பொலிஸ் கொஸ்தாபல் (பொறிமுறை) பதவி*

1. விண்ணப்பதாரியின் தொழில் :-----.

2. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்பு சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

4. தந்தையின் முழுப்பெயர் :-----.

5. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் :-----.

மாகாணம் :-----.

6. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும் தேர்தல் மாவட்டமும் :-----.

7. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா? பதிவு மூலம் எனில் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும் :-----.

(இ) வம்சாவழி மூலம் இலங்கை பிரசையானால் பின்வருபவர்கள் பிறந்த இடத்தை குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.

(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.

(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :-----.

(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் :-----.

8. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரரின் வயது (விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.) -----.

ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

9. உயரம் : ----- அடி ----- அங்குலம்

மார்பு : ----- அங்குலம்

10. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :----.

11. திருமணம் ஆனவரா? /திருமணமாகாதவரா? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையில் அங்கத்தவரா? :-----.

13. வேறு ஏதேனும் விசேட தகுதிகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினரல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :-

(அ) -----.

(ஆ) -----.

15. (அ) இலங்கை பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்தது உண்டா ? (அவ்வாறாயின்) அது தொடர்பான விபரங்களைத் தருக : -----.

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கை பொலிஸில் அல்லது இலங்கை உப சேவை பொலிஸில் சேவை செய்து உள்ளீரா ? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களை தருக :-----.

16. (அ) தற்போதைய படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதில் இருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

17. படைதாங்கு சேவையில் தொண்டர் அணியில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழ்களை இணைக்கவும் ;-

18. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டீரா ? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

19. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறில் சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்திற்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளீரா, அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவிற்கெட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----.
விண்ப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

3-326

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு**

மருந்துக் கலவையாளர்கள் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் - 2007

சுகாதார சேவைகள் திணைக்களத்தில் மருந்துக் கலவையாளர்கள் பயிற்சி நெறிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கு தகுதிவாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வித் தகைமைகள்.**- (அ) க. பொ. த. (உ. த.) பரீட்சை.- க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியல் அடங்கலாக பின்வரும் பாடங்களில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி அடைந்திருக்க வேண்டும் :-

பாடங்கள்.- தூய கணிதம், பிரயோக கணிதம்/ஒருங்கிணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல், விலங்கியல்/ தாவரவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம்.

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சை.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக இன்னுமொரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

1.2 ஏனைய தகைமைகள்.- (இ) 2007.02.09 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஈ) நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவை செய்ய விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும்.

(உ) சிறந்த உடல் ஆரோக்கியம் இருத்தல் வேண்டும்.

2. தேவையான தகைமைகள் உடைய விண்ணப்பதாரிகளுக்கு போட்டிப் பரீட்சையொன்று பல தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் நடத்தப்படும். இதில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெறுவோர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யப்படுவார்கள். பரீட்சை கணிதம், கிரகித்தல், நுண்ணறிவுச் சோதனை மற்றும் இரசாயனவியல் ஆகியவற்றில் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும். இரு விடைத்தாள்களிலும் பெறப்படும் கூட்டு மொத்தப் புள்ளிகளைக் கொண்டு புள்ளிகள் கணிக்கப்படும்.

3. இது ஒரு முழு நேரப் பயிற்சியாக இருப்பதால், கிழமையில் ஐந்து நாட்களிலும் சனிக்கிழமையில் முற்பகலிலும் ஏனைய பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கக் கூடாது.

4. பயிற்சிக் காலம் ஒரு வருடம் ஆகும். (இதில் 9 மாத காலத்திற்கு கோட்பாட்டு ரீதியான பயிற்சியும் 3 மாத காலத்திற்கு செயல்முறைப் பயிற்சியும் அடங்குகின்றது.)

5. விண்ணப்பிக்கும் முறை.- (அ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ) பரீட்சைக் கட்டணம்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 200 ஐச் செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணம் காசுக்கட்டளை ஒன்றின் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதுடன் அது கிடைக்கப்பெறுபவரின் பெயர் "செயலாளர், சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு, 'சுவசிறிபாய', 385, சங். பத்தேகம விமலவன்ச தேரோ மாத்தை, கொழும்பு 10" என்று எழுதப்பட்டு கொழும்பு பிரதம தபால் அலுவலகத்தில் மாற்றக் கூடியதாகவும் இருக்க வேண்டும். பரீட்சைக் கட்டணம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீள வழங்கப்பட மாட்டாது.

(இ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/ கல்வி நிர்வாக சேவை, அரசாங்க கணக்காளர்கள் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்/ அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி அல்லது ஆண்டு ஒன்றிற்கு ரூபா 1,24,080 க்குக் குறையாத சம்பளம் பெறும் அரசாங்க சேவை உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்கள் முறையாகப் பூர்த்தி செய்து பதிவுத் தபால் மூலம் "பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு, 'சுவசிறிபாய', 385, சங். பத்தேகம விமலவன்ச தேரோ மாத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2007.04.09 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது மூலையில் "மருந்துக் கலவையாளர் பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு" என்ற பதம் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

6. **அனுமதி அட்டைகள்**.- சுகாதாரச் செயலாளர் பரீட்சைத் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு அனுமதி அட்டைகளை வழங்குவார். இது தொடர்பான அறிவித்தல் பத்திரிகைகளில் வெளியிடப்படும். இது குறித்து விண்ணப்பதாரிகள் கவனமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்க பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட சட்டப்படியான தேசிய அடையாள அட்டை.

(ஆ) சட்டப்படி செல்லுபடியான கடவுச்சீட்டு.

7. விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டைகளை அக்காலத்தில் பெறாவிட்டால் பின்வரும் விபரங்களுடன் பணிப்பாளர்கள் (பரீட்சைகள்) உடன் தொடர்புகொள்ளவும். (தொலைபேசி இலக்கம் 011-2679160) :-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) தெரிவுசெய்யப்பட்ட நகரம் ;
(இ) விண்ணப்பித்த மாவட்டம் ;
(ஈ) விண்ணப்பப்பதிவு இலக்கம் ;
(உ) கட்டணக் கொடுப்பனவின் பற்றுச்சீட்டு இலக்கம்.

8. அரசாங்க அல்லது அரச சார்பு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர்கள் ஊடாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

9. விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

10. குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. இந்த அறிவித்தலுக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும்.

12. கல்வி மற்றும் ஏனைய தகைமையைப் பூர்த்தி செய்து போட்டிப் பரீட்சையில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அவர்கள் தேவைப்படும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப் பரீட்சையில் ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுவோர் பயிற்சித் தகைமைக்கு நிராகரிக்கப்படுவார்கள்.

13. (அ) பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலைகளில் நடைமுறையிலுள்ள விதிமுறைகளுக்கும் பிரமாணங்களுக்கும் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் காலத்திற்குக்காலம் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய கட்டளைகளுக்கும் உட்படுவார்கள்.

(ஆ) பயிற்சிப் பாடசாலைகளினால் நடத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது லீவு மற்றும் பரீட்சை

நிபந்தனைகளுக்கு அமையத் தவறினால் எந்தவொரு நட்டஈட்டுக் கொடுப்பனவுகளுமின்றி எவ்வேளையிலும் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

(இ) பயிற்சிக் காலத்தின்போது பயிற்சியாளர்களுக்கு படியொன்று கொடுக்கப்படும்.

(ஈ) பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும்போது பயிலுநர்கள் தாம் இடையில் வெளியேறாது பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பதாகவும் பயிற்சியை முடித்துக்கொண்ட பின்னர் தமக்கு நியமனங்கள் வழங்கப்பட்டால் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் சேவை செய்வதாகவும் ஒப்பந்தமொன்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் செய்து கொள்ள வேண்டும். அவர்கள் பயிற்சியை விட்டு விலகினால் அல்லது பயிற்சியிலிருந்து வாபஸ் பெற்றால் அல்லது பிரிவு 13 இன்படி தமது பயிற்சி நிறுத்தப்பட வேண்டுமாயின் அவருக்கு வழங்கப்பட்ட படிகளையும் அவரின் பயிற்சிக் காலத்தின்போது அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினங் களையும் திணைக்களத்திற்கு மீளளிக்க வேண்டும். அல்லாவிடில் ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறு அப்பணத்தை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

14. **வேலைக்கு அமர்த்தும் நிபந்தனைகள்.**- பயிற்சி முடிவின் போது நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு கடப்பாடு கிடையாது. ஆயினும் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர் களுக்கு நாட்டின் எந்தவொரு பகுதியிலும் கிடைக்கப்பெறும் வெற்றிடங்களைப் பொறுத்து திறமை அடிப்படையில் திணைக்களம் மருந்துக் கலவையாளர் தரம் III பதவிக்கு நியமனம் வழங்கும்.

15. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் பற்றிய விபரங்கள் கவனமாகவும் சரியாகவும் கொடுக்கப்பட வேண்டும். பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்ட விபரங்கள் பிழையானது என நிரூபிக்கப்பட்டால் நியமனத்தை இரத்துச் செய்து அவரைப் பயிற்சி/சேவையில் இருந்து விலக்கி தகைமையற்றவர் என முத்திரை குத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும்.

16. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தாம் பயிற்சியைப் பின்பற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் கடமையாற்று வதற்கும் மன, உடல் ரீதியாகத் தகுதியானவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். மருத்துவப் பரிசோதனை மூலம் சிபார்சு செய்யப்படாதவர்கள் பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்குத் தகுதியற்றவர்களாவார்கள்.

17. அந்த வகையில் தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை விதிகள், சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் வகுக்கப்படும் கொள்கைகள், நிதி மற்றும் ஏனைய பிரமாணங்கள், அரசாங்கத் தினால் காலத்திற்குக் காலம் நடைமுறைப்படுத்தப்படும் விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

18. பயிற்சி தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப் படாத எந்தவொரு பிரச்சினை பற்றி சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சின் செயலாளர் எடுக்கும் தீர்மானம் இறுதியானது.

டாக்டர் எச். ஏ. பீ. கஹண்டலியனகே,
செயலாளர்,
சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு**

மருந்துக் கலவையாளர்கள் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் - 2007

அலுவலகப் பயன்பாட்டிற்கு

மொழிமூலம் :

விருப்பு வரிசையில் விண்ணப்பித்த மாவட்டம்

சிங்களம் - சி
தமிழ் - த
(குறித்த எழுத்தைப் பெட்டியில் எழுதவும்.)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(பெரிய எழுத்துக்களில்)
(ஆ) முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) :-----.
(இ) முழுப்பெயர் (சிங்களம்/ தமிழ்) :-----.
(ஈ) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

2. (அ) நிரந்தர வதிவிட விலாசம் :-

| *சிங்களம்/ தமிழ்* | *ஆங்கிலம்* |
|---|---|
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |

(ஆ) அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய விலாசம் :-----.

3. (அ) பால்:
பெண் - பெ
ஆண் - ஆ
(குறித்த எழுத்தைப் பெட்டியில் எழுதவும்)
(ஆ) பிறந்த திகதி :-----.
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
(இ) 2007.02.09இல் வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

4. கல்வித் தகைமைகள் :-
க. பொ. த. (சா. த.)ப் பரீட்சையின் முதல் அமர்வு :-
வருடம் :-----.
சுட்டெண் :-----.

| *பாடம்* | *தரம்* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

க. பொ. த. (சா. த.)ப் பரீட்சையின் இரண்டாவது அமர்வு :-
வருடம் :-----.
சுட்டெண் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

க. பொ. த. (உ. த.) பரீட்சை :-
வருடம் :-----.
சுட்டெண் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. ஏனைய தகைமைகள் :-----.

6. எப்போதாவது எந்தவொரு குற்றச்செயலுக்கும் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? :-----.

ஆம் : ☐ இல்லை : ☐

(குறித்த பெட்டியில் "✓" இடவும்)
ஆம் எனில் விபரிக்கவும் :-----.

7. பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டு விபரங்கள் : -----.
(அ) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :-----.
(ஆ) பண உறுதிச்சீட்டு இலக்கமும் திகதியும் :-----.
(இ) செலுத்திய தொகை :-----.

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள தகவல் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் எந்தவொரு பகுதியை நிரப்பாததற்கு அல்லது பிழையாக நிரப்பிய தற்கான எந்த இழப்பையும் ஏற்றுக்கொள்ள நான் இணங்குகின்றேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் சரியாக நிரப்பியுள்ளேன் என உறுதி கூறுகின்றேன்.

(ஆ) இந்த உறுதிமொழி நியமனத்திற்கு முன் பிழையானதென நிரூபிக்கப்பட்டால் நான் தகைமையற்றவனாகச் செய்வ தற்கும் இது நியமனத்திற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் பதவிநீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை அறிவேன்.

(இ) இந்தப் பரீட்சையின் எல்லா நிபந்தனைகட்கும் உட்பட்டு நடக்க இணங்குகின்றேன்.

(ஈ) இந்த விண்ணப்பத்தில் கொடுத்த எந்தவொரு தகவலையும் பின்னொரு கட்டத்தில் மாற்றமாட்டேன்.

.............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

9. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................................................................................ என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் அவர் தமது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

............................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
விலாசம் :-----.
திகதி :-----.
(உத்தியோகபூர்வ ரப்பர் முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

3-353

---

## அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை-2007

அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையின் வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் தகவுத்திறன் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2007, யூன் மாதம் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு II இற்கு தரமுயர்த்துவதற்கான இப்பரீட்சை கொழும்பு, காலி, கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மாத்தறை, குருணாகல், இரத்தினபுரி, பதுளை, அனுராதபுரம் ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன :

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| காலி | 02 |
| கண்டி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| மாத்தறை | 06 |
| குருணாகல் | 07 |
| இரத்தினபுரி | 08 |
| பதுளை | 09 |
| அனுராதபுரம் | 10 |

மேற்படி ஏதேனுமொரு நிலையத்திற்காக போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அந்நிலையம் இரத்துச் செய்யப்படுவதுடன் அப்பரீட்சார்த்திகள் அடுத்துள்ள நிலையத்திற்கு மாற்றப்படுவர்.

3. (i) இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இவ் ஒழுங்கு விதிகளை மீறினால் அவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவர்.

4. **தகைமைகள்**.- சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்தவர்களும் 2007, ஏப்பிறல் 09 ஆந் திகதிக்கு முன்னர் நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களும் 04 வருட முனைப்பான அத்துடன் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ளவர்களுமான அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

**குறிப்பு**.- தரமுயர்வுப் பரீட்சையில் சித்தியடைந்த திகதியும் 05 வருட முனைப்பான அத்துடன் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்திசெய்த திகதியும் ஆகிய இரு திகதிகளில் பின்னராக அமையும் திகதி, பரீட்சையில் சித்தியடைகின்ற பரீட்சார்த்தியொருவர் சேவையின் வகுப்பு II இற்கு தரமுயர்த்துவதற்கு தகைமையடைந்த திகதியாக கருதப்படும்.

5. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சைக்காக உள்ள பாடமும் அந்தந்த பாடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன. சகல விடைத்தாள்களிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். வாசிக்க முடியாதவாறு எழுத்துக்களை எழுதியிருக்கும் பரீட்சார்த்திகள் தகைமையற்றவர்களாக்கப்படுவர்.

| *பாடம்* | *நேரம்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| தாபன நடைமுறை | 2 மணித்தியாலங்கள் | 100 |
| நிதி முறைமைகள் | 2 மணித்தியாலங்கள் | 100 |
| பொது வினாத்தாள் | 1 மணித்தியாலம் | 100 |

*தாபன நடைமுறை*.- அலுவலக முறைமைகள் தொடர்பான கோட்பாடுகள், அவற்றின் முக்கியத்துவம், எழுத்துத் தொடர்புகள், கோப்பிடும் முறை மற்றும் படிவங்களைத் தயாரித்தல் போன்ற விடயங்கள் உள்ளடங்கும் வண்ணம் மதிப்பிடுதலும் அரச அலுவலகங்களில் நடைமுறைப்படும் அலுவலக முறைமைகள் தொடர்பான அறிவையும் அலுவலக நடவடிக்கைகளின்போது பெற்றுள்ள அனுபவங்களின் தேர்ச்சியை மதிப்பிடுதலும் இவ்வினாத்தாளின் நோக்கமாகும். தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியில் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பான அறிவை பரிசோதிக்கும் ஒரு பகுதியும் இவ்வினாத்தாள் கொண்டிருக்கும்.

*நிதி முறைமைகள்*.- இவ்வினாத்தாள் பின்வருமாறு அமைந்திருக்கும்:

(அ) பகுதி I - கூட்டல் மற்றும் கழித்தல் பயிற்சிகள் (25 புள்ளிகள்)

(ஆ) பகுதி II - அரசாங்க திணைக்களங்கள், அமைச்சு அலுவலகங்கள் என்பவற்றில் பிரயோகிக்கப்படும் நிதிக்கட்டுப்பாடு, நிதிகளின் பொறுப்பு, வருமானங்கள் மற்றும் கொடுப்பனவுகள், வரவு செலவு மதிப்பீடு, வழங்கல், வேலைகளும், சேவைகளும் ஆகிய விடயங்களில் பரீட்சார்த்திக்குள்ள அறிவையும் புரிந்துணர்வையும் பரீட்சிக்கும் வகையில் இவ்வினாத்தாள் அமைந்திருக்கும். (50 புள்ளிகள்)

(இ) பகுதி III - பண்டகசாலை ஆய்வும் களஞ்சியப்படுத்தலும் தொடர்பான அடிப்படை விடயங்கள் (25 புள்ளிகள்)

**குறிப்பு**.- கூட்டல் வினாக்களுக்கு விடையளிக்கும்போது கணிப்பொறிகள் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது. (நேரம் : 15 நிமிடங்கள் மட்டும்)

**பொது வினாத்தாள்**.- இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்-

(i) ஏதேனும் ஒரு கூற்றினை அல்லது உரையாடலின் குறிப்பினை வாசித்து புரிந்துகொண்டு கடிதமொன்று அல்லது அதனுடன் அறிக்கையொன்று தயாரித்தல்.

(ii) சமகால சமுதாயத்தின் நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதிலும் ஆராய்வதிலும் பரீட்சார்த்திக்குள்ள திறமையை மதிப்பிடல்.

**குறிப்பு**.- (i) பரீட்சார்த்தி தாம் சேவைக்கு சேர்ந்த மொழி மூலத்திலோ அல்லது வேறு அரச கரும மொழியொன்றின் மூலமோ இவ் வினாத்தாள்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(ii) இப்பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 33 சதவீதமான (33%) புள்ளிகளையும் மூன்று பாடங்களுக்கு உரிய மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையின் 40% சராசரிப் புள்ளிகளையும் ஒரே அமர்வில் பெற வேண்டும்.

(iii) இப்பரீட்சையின் பாடங்களுக்கு உரியதான மாதிரி வினாப்பத்திரங்கள் உரிய காலத்தில் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்படும். (இணைய தளத்தின் முகவரி : www.pubad.gov.lk).

6. பரீட்சை பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2007, ஏப்பிறல் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்த, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும்போது திருப்திகரமான சேவை தொடர்பான சான்றிதழ் அதற்குள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். சகல விண்ணப்பங்களும் எல்லா வகையிலும் சரியாக பூர்த்திசெய்யப் பட்டுள்ளது என்பதிலும் சேவைச்சான்றிதழ் தன்னால் கையொப்பமிடப்

பட்டுள்ளது என்பதிலும் திணைக்களத் தலைவர் பொறுப்பாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

9. **விண்ணப்பப்படிவம்.**- விண்ணப்பப்படிவங்களை ஏ4 அளவிலான ஒரு தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் 1 தொடக்கம் 5 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் அமைதல் வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சின் மூலம் தயாரித்துக் கொள்ளலாம். எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்திசெய்ய வேண்டும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின்போது அலுவலர்கள் ஒரே முறையில் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 90 பெறுமதியான முத்திரைகளை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை உரியவாறு பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசி அட்டையின் ஒரு பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. எவரேனும் அலுவலர் ஒருவருக்கு பரீட்சை திகதிக்கு குறைந்தபட்சம் 07 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடையாவிடின், அனுமதி அட்டை கிடையாமை பற்றி பின்வரும் விபரங்களுடன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தந்தி முகவரி : "பரீட்சை", பத்தரமுல்லை)

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் ;
(iii) முழு முகவரி ;
(iv) விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம் மற்றும் அனுப்பிய திகதி.

10. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

11. அரச கரும மொழிக்கொள்கையின் குறிக்கோள்களுக்காக சகல விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை அரச கரும மொழியில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அவற்றினை அம்மொழியிலேயே பூரணப்படுத்தல் வேண்டும்.

12. இப்பரீட்சை அறிவித்தலுக்கு ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பான இறுதித் தீர்மானமானது இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தைச் சார்ந்ததாகும்.

ஏ. நோபேட்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2007, பெப்புருவரி 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை-2007**

Examination for Promotion of Officers in Class III of Public Management Assistants Service into Class II of the Service-2007

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

(வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர் பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும்.)

1. 1.1 விண்ணப்பதாரி முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில், உதா.- SILVA, A. B.)
1.2 முழுப்பெயர் :----.
(ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில்)
1.3 முழுப்பெயர் :----.
(சிங்களத்தில்/ தமிழில்)
1.4 நீங்கள் அரசாங்க சேவையில் சேர்ந்த பின் உங்களது பெயரை மாற்றியுள்ளீரா ? :----.
அவ்வாறாயின் முன்னர் இருந்த பெயரைக் குறிப்பிடவும் ----.

2. சேவை நிலையமும் முகவரியும் :----.
2.1 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில்)

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(சிங்களத்தில்/ தமிழில்)
(இம்முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிடப்படும்)

3. தேசிய அடையாள அட்டை இல.: | | | | | | | | | | |

4. பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
(பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

5. 5.1 பால் : (பெண்-1, ஆண்-0)

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

5.2 பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | நாள் | | |

6. தற்போது வகிக்கும் பதவி :----.

6.1 பதவி :----.

6.2 நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.

6.3 அச்சேவையில் வகுப்பு III இன் அலுவலராக நியமனத்தை உறுதிப்படுத்திய திகதி :----.

7. 7.1 நீங்கள் முதற்றடவையாக பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா ? :----.

7.2 பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றவில்லையெனில் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.

7.3 முத்திரைக் கூடு :

| நீங்கள் பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றவில்லை எனில் ரூபா 90 பெறுமதியான முத்திரைகளை இங்கு ஒட்டவும். |
|---|

8. **விண்ணப்பதாரரின் கூற்று :**

(I) மேற்படி என்னால் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை எனவும்,

(II) அரச முகாமை உதவியாளர் சேவையின் அலுவலர் எனவும் ---- ஆந் திகதி எனது நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

(III) 2007, ஏப்பிறல் 09 ஆந் திகதி உடன் முன்னரான 04 வருட காலத்திற்குள் எல்லா வேதன ஏற்றங்களையும்/ பெற்றுக் கொள்ள முடியுமான எல்லா சம்பள ஏற்றங்களையும் என்னால் உழைத்துப் பெறப்பட்டது எனவும்,

(IV) இறுதியான சம்பள ஏற்றத் திகதியிலிருந்து தண்டனை அல்லது எச்சரிக்கைக்கு மேற்பட்ட பாரிய தண்டனை எதுக்கும் நான் ஆளாகவில்லை என்றும்,

(V) நான் பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றுகிறேன் எனவும்/ பரீட்சைக் கட்டணத்திற்கான உரிய பெறுமதிகளுடன் கூடிய முத்திரைகளை இங்கு ஒட்டியுள்ளேன் எனவும்

கௌரவத்துடன் உறுதிப்படுத்துகிறேன்.

இதில் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ அல்லது பிழையானதெனவோ அறிய வருமிடத்து எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் அறிவேன். இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளை கடைப்பிடிப்பதற்கு நான் இணங்குகின்றேன்.

மேற்படி விபரங்கள் சரியானவை எனவும், மேற்காட்டப்பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எனக்கு உரித்துக்கள் உள்ளதெனவும் வெளிப்படுத்துகின்றேன். இங்கு ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் பயன்படுத்தப்படாத செல்லுபடியானவைகள் எனவும் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.
(பின் குறிப்பிடப்படும் குறிப்பை பார்க்கவும்)

திகதி :----.

**குறிப்பு**.- திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவருக்கு பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற அலுவலரொருவர் முன்னிலையில் விண்ணபதாரர் கையொப்ப மிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ---- எனது அலுவலகத்தின் அலுவலர் எனவும், நான் தனிப்பட்ட முறையில் அவரை அறிவேன் எனவும் ---- ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

(i) திரு./திருமதி/செல்வி ---- 2007, ஏப்பிறல் 9 ஆந் திகதியன்று அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இல் நான்கு (04) வருட சேவையைப் பூர்த்திசெய்துள்ள அலுவலரெனவும் ---- ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையுள்ளவரெனவும்,

(ii) அவரின் பெயர் வழிக்கோப்பின் வகுப்பு III இன் நியமனக் கடிதத்தின் இலக்கம் ---- (நியமனக் கடிதத்தின் இலக்கம் எழுதவும்) எனவும்,

(iii) அவர் இவ்விண்ணப்பப்படிவத்தில் 1 முதல் 6 வரையுள்ள பந்திகளில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையா என பரிசீலனை செய்யப்பட்டதெனவும், அவை சரியானவை எனவும்,

(iv) அவர் இப்பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றுகின்றார் எனவும்/தொடர்புடைய பரீட்சைக்காக குறித்துரைக்கப்பட்ட முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளன எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

(தேவையானவற்றை கீறிவிடவும்)

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

3-352